கழகம் எடுத்து வருகிறது. ஆனால், இதில் ஒன்றை மட்டும் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். துணை மின் நிலையங்கள் அமைக்கும்போது, நிலங்களைக் கையகப்படுத்துவதில் சிரமம் ஏற்படுகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் புதியதாகத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு, நிலம் கையகப்படுத்தும் பணிகளைச் செய்வது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உரிய ஆய்வுகளை மேற்கொள்ளும். தேவை ஏற்படின், அந்தப் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் அவசியம் ஏற்பட்டால், தேவையான நிலம் கண்டறியப்பட்டு, கையகப்படுத்தப்பட்டு, அங்கு துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

242—

உலர்களம்

***42941—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, அதிரான்விடுதி ஊராட்சி, கீழமஞ்சக்கரை மற்றும் வடக்குப்பட்டியில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, அதிரான்விடுதி ஊராட்சியில் உலர்களம் உள்ளது. அந்த ஊராட்சியின்

2015 செப்டம்பர் 14]

கீழமஞ்சக்கரை மற்றும் வடக்குப்பட்டி ஆகிய பகுதிகளில் உலர்களம் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் செடியில் துளிர்த்த அதிசயத் துளசி, வாழும் ஆண்டாள் நாச்சியாராகத் திகழும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

அதிரான்விடுதி ஊராட்சி, கீழமஞ்சக்கரை மற்றும் வடக்குப்பட்டி ஆகிய பகுதிகள் அதிகம் விவசாயம் செய்யப்படும் பகுதிகளாகும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, இதை மறுபரிசீலனை செய்யுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்கு வருடங்களில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியில் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக 366 உலர்களங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த ஊராட்சியில் ஏற்கெனவே உலர்களம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த ஊராட்சிக்குட்பட்ட கீழமஞ்சக்கரை மற்றும் வடக்குப்பட்டி ஆகிய கிராமங்களில் உலர்களம் வேண்டுமென்று கேட்கின்றார்கள். அதனை ஆய்வு செய்து, விவசாயிகளின் பயன்பாட்டினைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை தொகுதி, அதிரான்விடுதி ஊராட்சியில் கீழமஞ்சக்கரை மற்றும் வடக்குப்பட்டி ஆகிய பகுதிகளில் உலர்களம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். சிகரத்திற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் தொழிலாளர்கள் முதலீட்டு மாநாட்டினை நடத்திக்காட்டி, வரலாற்றுச் சாதனை புரிந்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி அமைகின்றேன், நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

முற்பகல் 10-15

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து பின்வரும் ஊராட்சிப் பகுதிகளில் வேளாண் விளைபொருட்களை உலர வைத்துப் பாதுகாப்பதற்கு சிமெண்ட் உலர்களம் அமைத்துத்தர வேண்டுமென்ற கோரிக்கைகள் வரப்பெற்றன:*

ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், சதுமுடையார்குளம், கரையாநல்லூர், நவநீதகிருஷ்ணபுரம் மற்றும் தென்காசி வட்டத்தில் பட்டாக்குறிச்சி விவசாயப் பெருமக்கள் நலன் கருதி மேற்காணும் ஊராட்சிப் பகுதிகளில் நடப்பாண்டில் சிமெண்ட் உலர்களம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதை தென்காசி தொகுதி மக்கள் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சார்பாகவும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மண் தரையிலும், சாலையோரத்திலும் விளைபொருட்களைக் காய வைத்து, தரம்*

பிரிப்பதால், நிறைய பாதிப்புக்குள்ளாகி வருகிறார்கள். அதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெங்கு உலர்களங்கள் தேவைப்படுகின்றனவோ, அங்கெல்லாம் விவசாயிகளுக்கு அமைத்துக் கொடுக்க ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்பொருட்டு, இந்த 4 வருடங்களில் 366 உலர்களங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த இடங்களில் தேவையிருப்பின் ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருப்பின் நிச்சயமாக, உலர்களங்கள் அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

243—

சுற்றுச் சாலை

***50566 திரு. அ. கணேஷ்குமார்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி, ஈயகுணத்திலிருந்து கொடுகன்குப்பம் வரை சுற்றுச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஊராட்சி, ஈயகுணம் வழியாகக் கொடுகன்குப்பம் வரை சுற்று வட்டச் சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது